**Starting time 1.39 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.254/2015**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 04.10.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கலியன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> தாவா சொத்தின் புல எண் என்னவென்றால், ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். வா.சா.ஆ.1 ஆக பட்டா பாஸ் புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 1983-ல் வழங்கப்பட்டது என்றால், ஆமாம். இந்த பட்டா பாஸ் புத்தகத்தில் என்னுடைய பெயருக்கு புல எண். 51-ல் 1 செண்ட் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால், ஆமாம். 1 செண்ட் என்பது 444 சதுரடி என்றால், ஆமாம். வா.சா.ஆ 1-ல் 1 செண்டிற்கு செக்குபந்தி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், ஆமாம். எனது வீட்டிற்கு வடக்கே செல்வராஜின் வீடு உள்ளது, தென்புறமும் செல்வராஜின் வீடும் உள்ளது. கிழக்கில் என்ன உள்ளது என்றால், வீதி உள்ளது. மேற்கில் என்ன உள்ளது என்றால், என் தம்பி ஆறுமுகத்தின் வீடு உள்ளது.

2. நான் சொன்ன மேற்படி செக்குபந்தி தாவா செக்குபந்தியில் சொல்லவில்லை என்றால், சரிதான். தாவா சொத்து விவரத்தில் பழைய புல எண். 51/1, புதிய புல எண். 166/12 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். தாவா சொத்து முழுவதும் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சுற்றிலும் 4 அடி விடப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை

என்னுடைய தாவா சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால், சரியல்ல, என் வீடு என்ன அளவு என்றால், 20-க்கு 20. 20-க்கு 20 என்றால், 400 சதுரடி, 400 சதுரடியில் வீடு கட்டியுள்ளேன் என்றால், சரிதான்.

3. சுற்றிலும் 4 சதுரடி விட்டு 400 சதுரடிக்கு தான் வீடு கட்டியுள்ளேன் என்று தாவாவின் எந்த இடத்திலும் நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. என் பெயருக்கு ஆத்தூர் தனி தாசில்தாரால் 1991-ல் கொடுக்கப்பட்ட தோராய பட்டாதான் வா.சா.ஆ.2 என்றால், சரிதான். அதில் ராமன் என்பவரின் இடம் என்னுடைய இடத்திற்கு தெற்கில் என்றால், இல்லை வடக்கு, அவருடைய புல எண்166/11 என்றால், சரிதான். ராமனின் மனைவி பெயர் கலியம்மாள் என்றால் பெயர் தெரியாது. தற்போதும் அந்த இடம் கலியம்மாள் பெயரில்தான் இருக்கிறது என்றால், அவர்களுடைய இடம் பற்றி எனக்கு தெரியாது.

4. என்னுடைய இடத்திற்கு வடக்கில் தற்போதும் கலியம்மாளின் சொத்துதான் இருக்கிறது என்றால், ஆமாம். அதில்தான் செல்வராஜ் கட்டிடம் கட்டி விட்டதாக நான் சொல்கிறேன் என்றால், சரியல்ல, என்னுடைய இடத்தையும் சேர்த்துக் கட்டிவிட்டதாகத்தான் சொல்கிறேன். புல எண். 166/11-க்கும் செல்வராஜிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், கலியம்மாள் இடத்திற்கும் என்னுடைய இடத்திற்கும் இடையே 2 அடி சந்து இருக்கிறது என்றாலும், நான் தவறாக வழக்காடி வருகிறேன் என்றாலும் சரியல்ல. கலியம்மாள் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால், இல்லை இறந்துவிட்டார்.

5. பிரதிவாதி தன்னுடைய பதிலுரையில் என்னுடைய சொத்திற்கு வடக்கே கலியம்மாளின் சொத்துதான் இருக்கிறது என்றும், அதற்கும் தனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று பதில் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். பிரதிவாதியின் பதிலுரையின் சங்கதிகள் அடிப்படையிலும் கூட கலியம்மாளின் வாரிசுகளை வழக்கில் சேர்த்து வழக்கு நடத்தவில்லை என்றால், சரியல்ல. என் நிலத்தை செல்வராஜ் சேர்த்து

கட்டிக் கொண்டார் என்பதை காட்ட நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்று இடத்தை காட்டினேனா என்றால், இல்லை.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 01.56 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.